மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடம் எதைக் கேட்டாலும் அனைத்தும் தாமதமாகிறது என்பது அனுபவபூர்வமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்களுக்குத் தெரியும், அவரும் அமைச்சராக இருந்தவர். திருவண்ணாமலை கிரிவலப் பாதை இதன்காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்திடம் சென்றாலும், இந்தத் திட்டத்தில் பணி செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதுபோன்ற நடைமுறை சரியாக வராது என்பதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2013–2014 ஆம் ஆண்டு முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசின் சொந்த நிதியில் பிச்சாவரம் பகுதியில் பணிகளைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்கள் குறிப்பிட்டு சில பகுதிகளைச் சொன்னால், அவரிடம் குறிப்புகளை வாங்கி, நிதி ஆதாரத்தை வைத்து என்ன செய்ய முடியுமோ அவை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

பாதாள சாக்கடைத் திட்டம்

***2360—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 ஜூன் 16]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டவுடன், தேவையான நிதியாதாரம் பெறப்பட்டு திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் 7 நகராட்சிகள் உள்ளன. அதில், ராஜபாளையம் நகராட்சி பெரிய நகராட்சியாகும். இங்கு திறந்தவெளி வாய்க்கால் அமைப்பு உள்ளதால், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இதனால், கடந்த 2014 ஆம் ஆண்டு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு, அதிகமான குழந்தைகள் உயிரிழப்பு ஏற்பட்டன. இதை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் அங்கு வந்து பார்த்தார்கள்; எத்தனை குழந்தைகள் பாதிக்கப்பட்டனர் என்பதை நன்கு அறிவார்கள். இதைத் தவிர்க்கும்பொருட்டு, ராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, ராஜபாளையம் நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 1,30,199 பேர்; மொத்தப் பரப்பளவு 11.36 சதுர கிலோ மீட்டர் ஆகும். ராஜபாளையம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார்*

செய்யப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டவுடன், நிதியாதாரம் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, ராஜபாளையம் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை அங்கு அனுப்பினார். அப்போது நானும் அங்கு சென்று ஆய்வுக் கூட்டங்களையெல்லாம் தொடர்ந்து, நடத்தி, டெங்கு காய்ச்சலை எந்தளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்தி, ராஜபாளையம் நகராட்சி மற்றும் அரசு பொது மருத்துவமனையை எப்படி மாற்றினோம் என்பது பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தப் பிரச்சினை வந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டப் பணியை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் 287 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை மத்திய அரசின் 'அம்ருத்' திட்டத்தின்கீழ் விரைவில் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகராட்சி, பேரூராட்சி போன்ற அனைத்துப் பகுதிகளிலும்

2017 ஜூன் 16]

பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதை ஒரு கொள்கையாகவே கொண்டுவந்து ஒரத்தநாடு போன்ற பேரூராட்சிகளில் எல்லாம் செய்திருக்கிறார்கள். Septage Management *என்ற ஒரு திட்டத்தைக் கூட கொண்டு வந்திருக்கிறார்கள். பாதாள சாக்கடைத் திட்டம் எங்கே ஆரம்பித்தாலும் அதைச் செயல்படுத்த எடுத்துக்கொள்ளும்போது சுத்திகரிப்பு நிலையம் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இப்போது அவையெல்லாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல 'அம்ருத்' திட்டம் மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் செய்யக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் சில பணிகளை எடுத்திருக்கிறோம். இதற்க்கான நிதியாதாரத்தை ஏதாவது ஒரு கணக்குத் தலைப்பில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் தாமிரபரணி ஆற்றில் கலக்கும் கழிவுகளைத் தடுக்கும் விதத்தில் நெல்லை மாநகராட்சிப் பகுதியில் முழுமையான பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, துறை அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும். அதேபோல மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஆறுகளில் கழிவுநீர் கலக்கக்கூடிய இடங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனியொரு கூட்டத்தை நடத்தி, ஆய்வு செய்து அந்த இடங்களிலெல்லாம் கழிவு நீர் கலக்கக்கூடாது என்று சொல்லி பொதுப் பணித் துறை மற்றும் எங்கள் துறையினருக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதியிலுள்ள விருதுநகர் நகராட்சி மாவட்டத்தின் தலைநகராக அமைந்துள்ளது. இந்த நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறுவதற்காக, 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அவை 3 பகுதிகளாக Package I, II and III என்று பிரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. Package 2 மற்றும் 3 தொடர்பான பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன, Package 1–ல் உள்ள 41 கிலோ மீட்டரில் உள்ள 3 கிலோ மீட்டர் பணி இன்னும் நடைபெறாமல் 11 ஆண்டு காலமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்த 41 கிலோ மீட்டரிலே 3 கிலோ மீட்டர் போக மீதிப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. பணி நிறைவுற்ற இடங்களிலும் கழிவுநீரை வாய்க்கால்களில் எடுத்துச் செல்வதற்கு சிரமம் ஏற்பட்டு, அந்தக் கழிவுநீர் எல்லாம் கௌசா நதியிலே கலக்கிறது. கௌசா நதியிலே கலக்கின்ற கழிவு நீர் குள்ளூர்சந்தை அணையிலே கலக்கிறது. அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அந்த அணையிலே இருக்கக்கூடிய உயிரினங்கள், மீன்களெல்லாம் பாதிக்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விடுபட்ட எஞ்சிய 3 கிலோ மீட்டர் பணியை விரைந்து முடித்துக்கொடுக்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். உட்காருங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: அதேபோன்று இந்த 3 கிலோ மீட்டர் போக இந்தத் திட்டத்திலே விடுபட்ட பணிகளும் பல இருக்கின்றன. அவற்றையும் சேர்த்து செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னார்கள். கடந்த 2006-2011

2017 ஜூன் 16]

தி.மு.க. ஆட்சியிலே 55 பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 20 பணிகளைத்தான் எடுத்தார்கள். அந்த 20 இடங்களில் பல்லாவரம் ஒன்றை மட்டும்தான் முடித்தார்கள். மீதி 19 பணிகளுக்கு முழுமையாக நிதியாதாரம் இறுதி செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்ததற்குப் பிறகுதான். அதிலும் 14 பணிகளை முடித்துவிட்டோம். மீதி 5 பணிகளை முடிக்க வேண்டியிருக்கிறது. அதிலும் பாதாள சாக்கடைத் திட்டம் என்றால் உங்களுக்கு நன்றாகத் தெரியும், முக்கியமான city–*குள்ளே,* main road–*லே பணிகள் செய்யும்போது பல துறைகளினுடைய ஒத்துழைப்பு மற்றும் அனுமதி தேவைப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையப் பிரச்சினை எல்லாம் இருக்கிறது. சில இடங்களில் ஏதாவது காரணத்திற்காக சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலை இருக்கிறது. ஆக மீதமுள்ள பணிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருதுநகரில்* Package 1–*ல் 3 கி.மீ. தூரத்திற்கு பணிகள் முடிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதுவும் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர் அவர்கள்.*

திரு. வீ. அலெக்சாண்டர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அம்பத்தூர் பகுதி முழுவதும் பாதாள சாக்கடைத் திட்டப் பணி சீரான, சுமுகமான முறையிலே 95 சதவீதம் முடிவுற்றுள்ளது. மீதம் 5 சதவீதம் ஒரு சில குறுக்குத் தெருக்களிலே நடைபெறாமல் உள்ளது. அதேபோல,* pumping well *போடும் பணி, இரண்டு மூன்று இடங்களில் நிலுவையிலே உள்ளது. அதை உடனடியாக செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

சொன்ன கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளிடம் கலந்துபேசி விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்திற்குட்பட்ட பகுதி. 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 72,812 மக்கள்தொகையையும், நெருக்கமான தெருக்களையும் கொண்ட தொகுதி. அங்கே சாக்கடை நீர் ஆங்காங்கே தேங்கி, சுகாதாரச் சீர்கேட்டினை விளைவிக்கின்றது. இந்தப் பிரச்சினை தீரவேண்டுமானால், அங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், அங்கே மார்செட்டிகுளம், தீர்த்தகுளம், ராஜாங்குளம் என்று மூன்று குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ள குளங்கள். அதில் சாக்கடை நீர் பாய்வதால் அந்த நீரின் இயல்புத் தன்மை மாறி சாக்கடை நீராகவே மாறிவிட்டது. எனவே, அந்தப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குளங்களில் இருக்கக்கூடிய பிரச்சினையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரிகால்சோழன் காலத்தில் இருந்த குடிமராமத்து என்கிற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்ததன்மூலம், அனைத்துக் குளங்களிலும் தூர்வாரும் பணி செயல்படுத்தப்படும் என்றதோடு, அதற்காக ஒரு தனி கூட்டத்தை அவர் ஏற்பாடு செய்திருந்தார். குளங்களுக்குள்ளே கண்டிப்பாக கழிவுநீர் கலக்கக்கூடாது என்பதற்காக ஆங்காங்கு mini diesel plant *போட*

வேண்டுமென்பதை ஒரு கொள்கையாகவே வைத்திருந்தார். அதுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது, அனைத்துப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்படும் என்பதை ஒரு கொள்கையாகவே அறிவித்திருந்தார்கள். கண்டிப்பாக அது படிப்படியாக நிறைவேற்றப்படும். நிதியாதாரம்தான் முக்கியமான பிரச்சினை. கண்டிப்பாக படிப்படியாக எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்கிற காலத்தில் வரலாறு படைத்து, வாழும் மனித தெய்வமாகத் திகழ்ந்து, இன்றைக்கு நமது இதயங்களில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கிற மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது மேட்டுப்பாளையம் தொகுதி, பவானி ஆற்றின் கரையிலே அமைந்திருக்கின்ற ஒரு நகராட்சி. பவானி ஆற்றின் தண்ணீரைத்தான் அந்தத் தொகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பருகிக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, பவானி ஆற்றில் கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு மின் உற்பத்தி செய்கிற இரண்டு கதவணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்டிருக்கிற அந்தக் கதவணையின் தேக்கத்திலேயிருந்துதான் குடிநீர் இன்றைக்கு அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. அப்படி எடுத்துச் செல்லப்படுகிற காரணத்தினாலே, நகராட்சியிலிருந்து வருகிற அனைத்து கழிவுநீரும் அந்த barrage–ல் தேக்கம் அடைகிற காரணத்தினாலே, அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தக் கழிவுநீரை அகற்றுகின்ற வகையிலே பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அம்மா அவர்களிடத்தில் கேட்டபோது, விதி 110–ன்கீழ் அந்தத் திட்டத்தை அறிவித்து இன்றைக்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தம் கோரும் நிலையிலே இருக்கிறது. அந்தக் கழிவுநீர், barrage–ல் கலக்காமல் பாதாள சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, பவானி ஆற்றிலே கலக்கிறபோது, எந்தவிதமான மாசும் படியாமல் அந்தத் தண்ணீர் இருக்கும் என்ற நிலையிலே, கடந்த காலத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள்.

இன்றைக்கு போர்க்கால அடிப்படையிலே அனைத்து ஆய்வுப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: ஆய்வுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்தின் அவசர அவசியத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிதியாண்டிலேயே அதை வேகமாக, நடைமுறைப்படுத்தித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கேட்ட கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம், அவரும், நாங்களும் கேட்டு, விதி 110—ன்கீழ் அறிவித்தார்கள். அது அவசியமான ஒன்றென்பது அங்கிருக்கக்கூடிய மக்களுடைய கோரிக்கை. ஏனெனில், கோயம்புத்தூர் பகுதியிலுள்ள எல்லா இடங்களுக்கும் அங்கிருந்துதான், முக்கியமாக, பில்லூர் I, II scheme—மூலம்தான் குடிநீர் வருகிறது. அதைப்போல, திருப்பூர் மாவட்டத்திற்கும், பல்லடம் பகுதிக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது முக்கியமான திட்டம் என்பதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அதை அறிவித்தார்கள். அதற்கு 91.70 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டிலேயே டெண்டர் விடப்பட்டு, உடனடியாக அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.